செ.வெ.எண். 700 நாள்.18.8.2010.

**தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், சென்னை 600 084.**

## இராணி கோல் தொடர் ஓட்டம் (Queen's Baton Relay)

### செய்திக்குறிப்பு

19–வது பொதுநலவாய (காமன்வெல்த்) விளையாட்டுப் போட்டிகள் புதுடெல்லியில் அக்டோபர் 2010 மாதம் 3ம் தேதி முதல் 14ம் தேதி வரை நடைபெறவுள்ளது. இதில் 71 நாடுகளைச் சார்ந்த 10,000க்கும் மேற்பட்ட விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ளார்கள். இப்போட்டியில் 17 விளையாட்டுப் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதனைத் தொடர்.து, இராணி கோல் தொடர் ஓட்ட அணி 71 நாடுகளிலும் ஒலிம்பிக் சுடர் ஓட்டம் நடைபெற்று வருகிறது. இத் தொடர் ஓட்டம் அக்டோபர் 2009 மாதம் 29ம் தேதி லண்டன் பக்கிங்ஹாம் அரண்மனையிலிருந்து துவங்கி தொடர்ச்சியாக 1,90,000 கிலோ மீட்டர் தூரத்தினை 340 நாட்களில் கடக்க உள்ளனர்.

இந்த இராணி கோல் தொடர் ஓட்ட அணி இந்தியாவில் 28 மாநிலங்களிலும் 7 யூனியன் பிரதேசங்களிலும் இந்த இராணி கோல் தொடர் அணி ஒலிம்பிக் சுடர் ஏற்றி தொடர் ஓட்டம் நடத்தப்பட்டு வரகிறது. இந்த தொடர் ஓட்டத்தில் மொத்தம் 85 அலுவலர்கள், விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் இதர அலுவலர்கள் இடம் பெறுகின்றனர். இந்த அணி மொத்தம் 29 வாகனங்களில் வருகை புரிகிறார்கள்.

இதனைத் தொடர்ந்து, இந்த சுடர் ஓட்டம் தமிழகத்தில் சென்னை, தஞ்சாவூர், இராமேஸ்வரம், மதுரை, கன்னியாகுமரி மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் நடைபெறவுள்ளது.

சென்னையில் நடத்தப்படும் தொடர் ஓட்டம் 20.08.2010 அன்று மாலை 5.00 மணியளவில் தீவுத் திடலில் மாண்புமிகு துணை முதல்வர் அவர்களால் துவங்கப்பட்டு சென்னை பெரியமேடு உள்விளையாட்டு அரங்கம் வரை நடைபெறும்.

இராணி கோலினை மாண்புமிகு சுற்றுச் சூழல் மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர் அவர்கள் மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்களிடம் வழங்குவார்கள். மாண்புமிகு தமிழக துணை முதலமைச்சர் அவர்கள் தமிழக அரசு தலைமைச் செயலர் மற்றும் முனைவர்.பா.சிவந்தி ஆதித்தன், தலைவர், தமிழ்நாடு ஒலிம்பிக் சங்கம் ,அவர்கள் முன்னிலையில் சிறப்பு விளையாட்டு வீரர்களிடம் வழங்குவார்கள்.

இந்த இராணி கோல் தொடர் ஓட்டம் 50 சிறப்பு விளையாட்டு ஸீவரர்களுடன் தீவுத் திடலில் இருந்து பெரியமேடு உள்விளையாட்டு அரங்கம் வரை சென்று அடையும்.

உள்விளையாட்டு அரங்கில் தமிழக அரசு கூடுதல் தலைமைச் செயலர் திரு.தேபேந்திரநாத் சாரங்கி, இ.ஆ.ப. அவர்கள் இராணி கோலினை பெறுவார்கள்.

மாலை நேர கலை நிகழ்ச்சிகள் சென்னை எழும்பூர் அருங்காட்சியகம் அரங்கில் மாலை 7.00 மணி முதல் நடைபெறும். அப்போது பொதுநலவாய சிறப்பு அஞ்சல் உறை வெளியீட்டு விழா நடைபெறும். அவ்வமயம் இதன் முதல் சிறப்பு அஞ்சல் உறையினை அஞ்சல் துறை தலைமைச் செயலர் வெளியிட தமிழக அரசு தலைமைச் செயலர் அவர்கள் பெற்றுக் கொள்வார்கள்.

இராணி கோல் தொடர் ஓட்டம் தமிழகத்தில் சுற்றுப்பயணம் மேற்கொள்வதற்கான விவரங்கள் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது.

இராணி கோல் தொடர் ஓட்டம் 20.08.2010 அன்று மாலை 5.00 மணியளவில் சென்னை தீவுத் திடலில் துவங்கப்பட்டு, இதன் தொடர்ச்சியாக 2010 செப்டம்பர் மாதம் 1ந்தேதி வரை தமிழகத்தில் நடைபெறவுள்ளது.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9